| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறைகள் | |
|---|---|
| பிறப்பிப்பவர் – திரு.ஆர்.வெங்கடேஸ்வரன், பி.காம்., | |
| ந.க.எண். 5137/2025/க.3 | நாள்.18 .08.2025 |

பொருள் :: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி அலகு – தஞ்சாவூர் மாவட்டம் – 2023-2024-ஆம் ஆண்டு – 10 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில் பதிவறை எழுத்தரிலிருந்து பணிமாற்றத்தின் மூலம் பதவி உயர்வு – ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் – ஊர்நல அலுவலர் நிலை-II – திருசெ.ஞானசெல்வன் என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

படிக்கப் பட்டவை :: 1) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை கடிதம் ந.க.எண்.50385/2024/பி.3, நாள். 14.10.2024.

2) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8478/2023/க.5, நாள். 04.11.2024.

3) ஒரத்தநாடு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கடித ந.க.எண்.4017/2024/அ1, நாள்.08.08.2025

-----------

**உத்தரவு**

முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயலாணைகளின்படி, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வந்த திருசெ.ஞானசெல்வன் என்பவருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிமாற்றல் மூலம் பதவி உயர்வில் ஊர்நல அலுவலர் நிலை-II-ஆக பணிநியமனம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இவர் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் 11.11.2024 முற்பகல் ஊர்நல அலுவலர் நிலை-II-ஆக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

2) மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, இவரது பணியினை வரன்முறை செய்திட பரிந்துரைக்கப்பட்ட கருத்துரு பெறப்பட்டது.

3) இவரது கல்விச்சான்றுகளின்மீது மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்ட பின்னரே பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியர்மீது ஒழுங்கு நடவடிக்கை குறித்த இனங்கள் ஏதுமில்லை என அலுவலகத் தலைவரால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

4) எனவே, திருசெ.ஞானசெல்வன் என்பவருக்கு கீழ்க்காணும் அட்டவணையில் கலம் (4)-இல் குறிப்பிடப்பட்ட தேதியில் இவரது பணியினை ஊர்நல அலுவலர் நிலை-II பணிநிலையில் வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர்/பதவி/ பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1) | செ.ஞானசெல்வன்,<br>ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், ஒரத்தநாடு. | 11.11.2024 முற்பகல் | 11.11.2024 முற்பகல் |

18/8/2025

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

பெறுநர்

திருசெ.ஞானசெல்வன், ஊர்நல அலுவலர் நிலை-II,
ஊராட்சி ஒன்றியம், ஒரத்தநாடு. } – உரிய வழியாக.

நகல் – வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), ஒரத்தநாடு.

நகல் – க.3 இருப்பு கோப்பிற்கு.